SWIS-H
STATEWIDE INFANT SCREENING - HEARING



# எனது குழந்தைக்கு மீண்டும் செய்யப்படும் செவித்திறன் திரைப் பரீட்சைக்கு (hearing screen) க்கு ஏன் அவசியம் ஏற்படுகிறது?

மீண்டும் செய்யப்படும் செவிமடுப்புத் திறன் திரைப் பரீட்சை பல குழந்தைகளுக்கு அவசியமாகிறது.

இப்படிச் செய்வதால் உங்கள் குழந்தைக்குக் காது கேட்கும் திறன் பாதிக்கப்பட்டுள்ளது என்று அர்த்தம் அல்ல. இரண்டாவதாக செய்யப்படும் திரைப் பரீட்சைக்கு வேறு காரணங்கள் இருக்கலாம்.

உங்கள் குழந்தை பிறந்த பிறகு அதன் காதில் ஏற்படும் அடைப்பு அல்லது அதன் காதில் ஏற்படும் திரவ சுரப்பே இரண்டாவது திரைப் பரீட்சை செய்யப்படுவதற்குப் பிரதான காரணமாகும்.

பெரும்பாலான வேளைகளில் நீங்களும், உங்கள் குழந்தையும் மருத்துவமனையை விட்டு அகலுவதற்கு முன்பாகவே இந்த மறு திரைப் பரீட்சை செய்யப்படும்.

இந்த இரண்டாவது திரைப் பரீட்சையை நீங்கள் மருத்துவமனையில் இருக்கும் போது செய்ய இயலவில்லை என்றால், நீங்கள் மருத்துவமனையை விட்டுச் சென்ற பிறகு, ‘வெளிநோயாளி’ (outpatient) என்ற முறையிலோ அல்லது உங்களது உள்ளூர்ப்பகுதியிலுள்ள சமூக மையம் ஒன்றிலோ இந்த இரண்டாவது திரைப் பரீட்சையை மேற்கொள்வதற்கான வாய்ப்பு விரைவில் உங்களுக்கு அளிக்கப்படும்.

இந்த மீள் திரைப் பரீட்சை எங்கு, எப்போது செய்யப்படும் என்பதை இந்தத் தகவலேட்டை உங்களுக்குத் தருபவர் தெரியப்படுத்துவார்.

## முடிவுகள்

முதலாவதாக செய்யப்படும் இந்த செவித்திறன் திரைப் பரீட்சைக்குப் பிறகு முடிவுகள் உங்களுக்கு விளக்கிச் சொல்லப்படும், மற்றும் உங்கள் குழந்தையின் ‘சொந்த உடல்நலப் பதிவே’ (Personal Health Record) ட்டில் இவை குறிக்கப்படும். இப் பதிவேடு ‘நீலப் புத்தகம்’ (Blue Book) என்றழைக்கப்படும்.

இந்த மீள் செவித்திறன் திரைப்பரீட்சையில் தெளிவான முடிவு கிடைக்காவிட்டால், ‘ஒலியியலாளர்’ (Audiologist) ஒருவரால் செய்யப்படும் செவித்திற நோய் அறிதல் மதிப்பீடு ஒன்றிற்காக உங்கள் குழந்தை பரிந்துரைக்கப்படும். ‘ஒலியியலாளர்’ (Audiologist) என்பவர் செவிப்புல சோதனையில் சிறப்புப் பயிற்சி பெற்றவராவார்.

உங்கள் குழந்தைக்கு சரியான அறிவுரை-ஆலோசனையும், உதவியும் வழங்கப்பட ஏது செய்யும் வகையில் உங்கள் குழந்தைக்குக் காது கேட்கும் திறன் எந்த அளவிற்கு உள்ளது என்பதை கூடிய விரைவில் கண்டறிய வேண்டியது இன்றியமையாததாகும்.

**மேலதிகத் தகவல்களுக்கு தயவு செய்து கீழ் வரும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்:**

http://www.health.nsw.gov.au/kids-families

உள்ளூர்த் தொடர்பு/சந்திப்புநேர விபரங்கள்

சுகாதார அறிவுரைக்காக *healthdirect Australia* –உடன் தொடர்புகொள்ளுங்கள்.
http://www.healthdirect.gov.au/
**1800 022 222**

NSW GOVERNMENT | Health



© NSW Health September 2016 SHPN (NKF) 150215